ஸ்ரீ:

ஸ்ரீமதேராமாநுஜாய நம:

ஹரிஸமய திவாகரம்.

தொகுதி உ. குரோதனஹூ ஐப்பசிமீ பகுதி ௰.

VOL. 2. OCTOBER & NOVEMBER 1925. No. 10.

ஸ்ரீ ராமாநுஜஸித்தாந்த ப்ரகாசிகை.

ஸ்ரீமதுபயவேதாந்த வித்வான் காரப்பங்காடு சிங்கப்பெருமாள் ஸ்வாமி எழுதுவது.

(199-ம் பக்கத் தொடர்ச்சி.)

இனி, ப்ரபத்தியாவது, "த்வமேவோபாய பூதோமே பவேதி ப்ரார்த்தனுமதி: சரணுகதி ரித்யுக்தா" என்றும், "அநந்யஸாத்யே ஸ்வாபீஷ்டே மஹாவிசுவாஸ பூர்வகம் ததேகோபாயதா யாச்நா ப்ரபத்தி: சரணுகதி:" "மாமேகம் சரணம் வ்ரஜ" இத்யாதி ப்ரமாணங்களிலுலே, நீயே எனக்கு உபாயமாகவேணுமென்று ப்ரார்த்திக்கை சரணுகதி என்றும், ஈசுவரனைத்தவிர மற்றென்றுல் ஸாதிக்கமுடியாததாயும் தனக்கு இஷ்டமாயுமுள்ள மோக்ஷத்திற்கு அவனையே உபாயமாக ப்ரார்த்திக்கை சரணுகதி என்றும், மற்ற உபாயங்களைவிட்டு என்னை ஒருவனையே உபாயமாகப்பற்றவேணும் என்றும் சொல்லப்பட்டிருப்பதால், அவனே உபாயமென்கிற அத்யவஸாயத்தோடு கூடின உபாயத்வ ப்ரார்த்தனையே சரணுகதியென்று ஏற்படுகிறது. இந்த ப்ரமாணங்களில் ஏகசப்தம், ஏவகாரம் இவைகளால் ஈசுவரன் உபாயமாமிடத்தில் வேறு உபாயங்களை அபேக்ஷியாமலே உபாயமாகிறுன் என்று ஏற்படுகிறபடியாலும், "ஸர்வதர்மாந் பரித்யஜ்ய" என்பதால் மற்ற உபாயங்களைவிட்டே பற்றவேணும் என்றிருப்பதாலும் இந்த அதிகாரிக்கு ஈசுவரனைத்தவிர வேறு உபாயம் இல்லை.

ஆனுல் நீயே உபாயமாகவேணுமென்று இவன் ப்ரார்த்திப்பதால் அந்த ப்ரார்த்தனையாகிற ஹேதுவினுலே ஈசுவரன் பலப்ர

தார்னம் பண்ணுமிடத்தில் அந்த ப்ரார்த்தனையே உபாயமாகிறபடியால் ஈசுவரனுக்கே உபாயாந்தர நைரபேக்ஷ்யமாகிற ஏக சப்தார்த்தம் அநுபபந்நமாமே என்னில்? ''ஜ்யோதிஷ்டோமேந ஸ்வர்க்ககாமோ யஜேத'' என்கிற இடத்தில், ஸ்வர்க்ககாமனையானது ஸ்வர்க்கத்துக்கு ஸாதனமின்றியே அதிகாரிவிசேஷணமாகிருப்போலே, நீயே உபாயமாகவேணுமென்கிற ப்ரார்த்தனையும் சித்தோபாய அதிகாரிக்கு விசேஷணமாயிருக்கும்.

ஆனால், அந்வயவ்யதிரேகங்களினால் ப்ரபத்திக்கு ஸாதநத்வம் ஏற்படமாட்டாதோவென்னில்; ஸாதநமாவது.- அநந்யதாஸித்தமாயிருப்பதாகையால், (அதாவது, தன்னையொழிய வேறொன்றால் பெறப்படாத பலஸித்திக்குத் தவறாமல் முன் நிற்பதாகையால்) ஈசுவரனை உபாயமென்கிற ப்ரமாணத்தாலே, ஈசுவரனைத் தவிர இது உபாயமல்லாமையாலே தன்னையொழிய ஈசுவரனால் பெறப்படும் பலஸித்தியாலே அந்யதாஸித்தமாயிருக்கையால், அநந்யதா ஸித்தமாய்க் கொண்டு நியதபூர்வவ்ருத்தியா யிருக்கவேண்டிய ஸாதநலக்ஷணமில்லாமையாலே ப்ரபத்தி சாதனமாகமாட்டாது.

எப்படி ஜ்யோதிஷ்டோமாதி ஸ்தலங்களில் ஸ்வர்க்க காமனையானது நியதபூர்வ வ்ருத்தியா யிருந்தபோதிலும், யஜந கர்த்தாவான அதிகாரிக்கு விசேஷணமா யிருப்பதால் அந்த ஸ்வர்க்க காமனைக்கு ஸாதநத்வம் ஏற்படவில்லையோ; அப்படியே இங்கும் சரணவரணம் அதிகாரிவிசேஷணமாயிருப்பதால் அதற்கு ஸாதநத்வமில்லாமையால்; அது ஹேதுவாகமாட்டாதென்று கண்டுகொள்வது.

அப்படி அதிகாரி விசேஷணமாகச் சொல்லும்பக்ஷத்தில் ''ஸித்தமேவஹி ஸர்வத்ர நியோஜ்யஸ்ய விசேஷணம்'' என்பதால் அதிகாரி விசேஷணமாயிருப்பது ஸித்தமாகவே யிருக்கவேணுமென்றேற்படுவதால், ''மாமேகம் சரணம் வ்ரஜ'' என்று விதேயமாகச் சொல்வது கூடாதேயென்னில், அந்த நியமம் ஸாத்யோபாயவிஷயமாகையால், ஸித்தோபாயவிஷயத்தில் விரோதிக்காது.

அல்லாமல், ஸித்தோபாய விஷயத்திலும் அதிகாரிவிசேஷணம் ஸித்தமாகவே யிருக்கவேணுமென்னில்; உபாயமும் ஸித்தமாய் அதிகாரமும் ஸித்தமாயிருக்கும்பக்ஷத்தில் ஸர்வமுக்திப்ரஸங்கம் ஏற்படும். ஆதலால் அது கூடாது. அங்ஙனமன்றிக்கே வேறு வாக்கியங்

களினுலே விதிக்கப்பட்டதொரு விஷயமானது மற்றொருவாக்கியத்தில் ஸித்தமாய்க்கொண்டு அதிகாரிவிசேஷணமாகலாம். எப்படியென்னில் "அக்நீநாதநீத" என்றும், "ஸ்வாத்யாயோ அத்யேதவ்ய:" என்றும் வாக்கியாந்தரங்களால் விதிக்கப்பட்ட 'அக்ந்யாதானம்' 'அத்யயநம்' இவைகள் யாகாதிகாரிக்கு ஸித்தவிசேஷணமாவதுபோலே இங்கும் 'ஸர்வதர்மாந் பரித்யஜ்ய' என்று பூர்வவாக்கியத்தால் விதிக்கப்பட்ட சரணவரணம் உத்தரத்தில் 'த்வா' என்பதனுல் சரணவரணம் செய்த உன்னை என்று, அநுவதிக்கப்பட்டிருப்பதால் மோக்ஷாதிகாரிக்கு ஸித்தவிசேஷணமாகலாம்.

ஆனால் 'சரணம்வ்ரஜ' என்று சரணவரணம் விதிவிஷயமாயிருப்பதால் அந்த விதியாலே க்ருதிஸாத்யத்வமும், அதனுல் ஆக்ஷிப்தமான இஷ்ட ஸாதநத்வமும் ஏற்படுகிறபடியால் சரணவரணம் உபாயமன்றென்று சொல்லுமது அநுபபந்நமென்னில்; விதிக்கு கேவல க்ருதிஸாத்யத்வமே அர்த்தமாகக்கொள்வது பாதகமில்லாத ஸ்தலத்தில்; அங்கு இஷ்டஸாதநத்வம் அர்த்தாத் ஸித்திக்கும். இங்கு, சரணம்வ்ரஜ என்பதில் சரணுகதி உபாயவரணரூபமாக ஏற்படுகிறபடியால், உபாயவரணத்துக்கு உபாயத்வ மில்லாமையாலே சரணம்வ்ரஜ என்கிற விதியால் சரணவரணத்துக்கு இஷ்டஸாதநத்வம் ஏற்படமாட்டாது.

மேலும், இஷ்டஸாதநமென்பது இஷ்டமான ப்ரயோஜநத்தை அடையச்செய்வது என்று ந்யாயசாஸ்திரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது; சரணவரணம் இஷ்ட ப்ரயோஜனமாகையால் விதிக்கும் விஷயமாகலாம். அன்றியும், இந்த சரணவரணத்திற்கு பலம் ஈசுவரன் தனக்கு உபாயமாயிருக்கையாகையால் அந்த உபாயமாயிருக்கையாகிற இஷ்டத்துக்கு ஸாதனமாயிருப்பதால் இஷ்டஸாதநத்வமும் ஏற்படலாம். இப்படியே ஸாரஸ்வாதினியில், "ப்ரபத்தி ஈசுவரனுடைய உபாயாந்தர ஸ்தாந நிவேசத்துக்கு ஸாதநமாவதல்லது பக்தியைப்போலே ஸாக்ஷாத்தாய் மோக்ஷ ஸாதநமன்று" என்று நிரூபிக்கப்பட்டிருக்கிறது. அப்படியே இங்கும் தன் விஷயத்தில் ஈசுவரன் உபாயமாகையாகிற பலத்திற்கு ஸாதனமாயிருக்கத் தட்டில்லை. ஆனுல் ஈசுவரனுக்கு உபாயத்வம் ஸ்வாபாவிகமா யிருந்தபோதிலும் தனக்கு ஈசுவரன் பலப்ரதனுயிருக்கை ப்ரார்த்திக்கப்படலாம். இங்ஙனமன்றிக்கே இவன்பாசுரம்கேட்டவாறே திருவுள்ளமுகக்கும்

என்பதுபோல் ஸ்வயம் ப்ரயோஜனமான பகவந்முகோல்லாஸத்துக்கு ஸாதநமாகையாலும் இஷ்ட ஸாதநத்வம் ஏற்படும்.

இப்படியிருக்கையாலே வேறொன்றுக்காக அநுஷ்டிக்கப்படுவதாய்க் கொண்டு ப்ரஸங்காத் உபகாரகமாயிருக்கையால் ப்ரபத்தி வ்யாஜமாக ஏற்படுகிறது. இதை யனுசரித்தே தேசிகனும் "ப்ரபத்தே: வ்யாஜ மாத்ரத்வம்" என்பதால் ப்ரபத்தியை வ்யாஜோபாயம் என்று அருளிச் செய்திருக்கிறூர். இப்படியுள்ள ப்ரபத்தி அநுபாயமென்பதும் தேசிகன் ந்யாய ஸித்தாஞ்ஜநத்தில் அருளிச்செய்த "இயம் கேவல லக்ஷ்மீச" என்கிற சுலோகத்தால் வ்யக்தமாம். அதன் அர்த்தம். ஸ்ரீய:பதியான ஈசுவரனிடத்திலிருப்பதாயும், மற்றவர்களிடத்தி லில்லாததாயும் இருக்கிற உபாயத்வத்தை விஷயீகரிக்கிற ஜ்ஞானமாயுள்ள ப்ரபத்தியானது தான்உபாயமென்கிற புத்தியைத் தடுக்கிறது என்பதாம். இத்தால் ஈசுவரனைக் காட்டிலும் அந்யமாயுள்ளதொரு உபாயமில்லையென்றும், ப்ரபத்தியும் ஈசுவரனைக் காட்டிலும் வேறாகையாலே இதுவும் உபாயமாகமாட்டாதென்றும் ஏற்படுகிறபடியால் ப்ரபத்தி அநுபாயமென்பது ஸித்தம்.

ஆனல் இந்த உபாயத்வம் பலப்ரதத்வரூபமாகக்கொள்ளில் அது, ப்ரபத்தியில் ப்ரஸக்தமாகாமையாலே ப்ரஸக்தத்துக்கே ப்ரதிஷேதம் உசிதமாகையால் நிஷேதம் அநுபபந்நமாம். நிக்ஷேப சிந்தாமணியில் கீழ்ச்சொன்ன சுலோகத்துக்கு அர்த்த நிரூபணம் பண்ணுகையில், "ப்ரபத்திக்கு உபாயத்வம் அந்வயவ்யதிரேகங்களினுல் ஏற்பட்டிருந்தபோதிலும், விசாரதசையில் அந்த ப்ரபத்தி உபாயத்வ ஜ்ஞானரூபமாகையாலே உபாயத்வ மேற்படாது" என்று நிரூபிக்கப்பட்டிருக்கிறது. இப்படியே 'ஜ்ஞானஸித்தாஞ்ஜன' வ்யாக்யானமான ரத்நபேடிகையில் திருப்புட்குழி ஸ்வாமியும் நிரூபித்திருக்கிறூர்.

அங்ஙனமன்றிக்கே அஹிர்புத்ந்ய ஸம்ஹிதையில் "உபேக்ஷகோ யதாகர்ம பலதாயீதி யாமதி:" என்கிற சுலோகத்தில் கர்மானுகுணமாக ஈசுவரன் பலப்ரதானம் பண்ணுகிறவனுகையால் உபேக்ஷகன் என்கிற ஜ்ஞானமானது ஈசுவரன் ரக்ஷிக்கக்கடவன் என்கிற விசுவாஸத்துக்கு ப்ரதிபந்தகம் என்று சொல்லியிருப்பதால், ப்ரபத்தி உபாயமாகும் பக்ஷத்தில் அந்த உபாயத்தை அநுஷ்டிக்கிறவனிடத்தில் அந்த ப்ர

பத்தி ரூபகர்மாநுகுணமாக பலப்ரதானம் ஈசுவரன் பண்ணுகிறவன் என்றேற்படுவதால் ஈசுவரன் உபேக்ஷகன் என்கிற புத்தியானது அவசியம் உண்டாகக் கூடுமாகையால் ப்ரபத்திக்கு அங்கமாயுள்ள விசுவாஸம் ஏற்படமாட்டாதென்று ஆக்ஷேபித்து, ப்ரபந்ந விஷயத்தில் மோக்ஷபலம் தாயத்வஸம்பந்தப்ரயுக்தம் 'ப்ரபத்திப்ரயுக்தமன்று' என்று 'நிக்ஷேபசிந்தாமணி'யில் நிரூபித்திருப்பதையும் கண்டு கொள்க.

மேலும் நம: சப்தார்த்த விசாரத்தில், நம: சப்தார்த்தம் அநந்ய சரணத்வமானால், ப்ரபத்தியை உபாயமாகஅநுஷ்டிக்கும்பக்ஷத்தில் அநந்யசரணத்வம் ஏற்படாதாகையால் ப்ரபத்தி உபாயமன்று; வ்யாஜம். என்று 'ஸாராஸ்வாதிநி'யிலும் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. அந்த வ்யாஜத்வம் பலகரணத்வரூப உபாயத்வத்தைக்காட்டிலும் வேறுபட்டது. அப்படியன்றிக்கே வ்யாஜத்வம் பலகாரணத்வ ரூபமாகச் சொல்லும்பக்ஷத்தில் ஜ்யோதிஷ்டோமாதிகளும் ஸ்வர்க்கத்துக்கு வ்யாஜங்களாகவே ஏற்படும். அது பூர்வதந்த்ர விருத்தம்.

அதுநிற்க, "பகவத் ப்ரவ்ருத்திவிரோதி ஸ்வப்ரவ்ருத்திநிவ்ருத்தி: ப்ரபத்தி:" என்கிற பூர்வாசார்யர்களுடைய வாக்யத்தால் ஈசுவரன் உபாயாந்தரங்களை அநுஷ்டிக்கிறவன்விஷயத்தில் தான் நிருபாதிகரக்ஷகனாகிறதில்லை என்றறியலாம். ஆகையால் உபாயாந்தர ப்ரவ்ருத்தியானது ஈசுவரனுடைய ரக்ஷணப்ரவ்ருத்திக்குத் தடையாகையால் அந்த உபாயாந்தரங்களைவிட்டு ஈசுவரனை உபாயமாகப் பற்றுகையாகிற ப்ரபத்தி ஸ்வப்ரவ்ருத்திநிவ்ருத்திவிசிஷ்டையாகையாலே அந்த ப்ரபத்தி ஈசுவரனுடைய ரக்ஷணத்துக்கு ப்ரதிபந்தகமான உபாயாந்தரப்ரவ்ருத்திநிவ்ருத்தியோடு கூடினதாகையால் ப்ரதிபந்தகாபாவ ரூபையாக ஏற்படுகிறது. நம்முடைய ஸித்தாந்தத்தில் ப்ரதிபந்தகாபாவத்துக்குக் காரணத்வமில்லை; அத்தாலும் ப்ரபத்தி உபாயமாகமாட்டாது.

ஆனால் ப்ரவ்ருத்தி நிவ்ருத்தி ஸ்வாபகாலத்தில் உண்டாயிருப்பதால் அப்பொழுதும் இவன் ப்ரபந்நனாகக்கூடும் என்கிற ஒரு சங்கை வரக்கூடாதோ வென்னில், ஜ்ஞான கார்யமான நிவ்ருத்யாக்ய யத்நமே இவ்விடத்தில் விவக்ஷிதமாகையால் அது வரமாட்டாது.

ஆனால் ஸர்வசக்தனான ஸர்வேசுவரன் ரக்ஷணத்தில் ப்ரவ்ருத்தனானால் அந்த ப்ரவ்ருத்திக்கு இவனுடைய ப்ரவ்ருத்தி ப்ரதிபந்தகமாகும்பக்ஷத்தில் அவனுடைய ஸர்வசக்தத்வத்திற்கு குறைவுண்டாகாதோ வென்னில், ஈசுவரன் உபாயாந்தர ப்ரவ்ருத்தன் விஷயத்தில் தான் நிருபாதிகமாக ரக்ஷிக்கிறதில்லை என்று ஸங்கல்பித்திருப்பதால் அந்த ஸங்கல்ப்பத்தை அநுஸரித்து அவன் விஷயத்தில் ரக்ஷண ப்ரவ்ருத்தியில்லாமை ஸர்வசக்தத்வத்துக்குக் குறைவாக மாட்டாது. இப்படியே, இது பூர்வாசார்யர்களுடைய வாக்யமென்று ரஹஸ்யத்ரயஸாரத்தில் தேசிகன் அருளிச் செய்திருக்கிறார்.

ஆனால் ப்ரபத்தியை உபாயமாக அநுஷ்டித்தபின்பு உபாயாந்தர ப்ரவ்ருத்தி கூடாதென்பது அந்த வாக்யத்தின் அர்த்தமாகச் சொல்லுமது வாக்ய ஸ்வாரஸ்ய விருத்தமாம்.

இப்படி யிருப்பதாலே பிராட்டி "சீதோபவ ஹநூமத:" என்று தன்னுடைய வாக்யத்தாலே திருவடிவிஷயத்தில் அக்நியைச் சுடாமலிருக்கும்படி பண்ணினதுபோலே ராவணனையும் தன்னுடைய வாக்யத்தாலே, 'நத்வாகுர்மி' என்கிற சுலோகத்தின்படி பஸ்மமாக்கவல்ல சக்தி யிருக்கச்செய்தேயும், அந்த ப்ரவ்ருத்தி பெருமாளுடைய ரக்ஷணத்துக்குத் தடையென் றேற்படுகிறபடியாலொழிக்கப்பட்டது.

ஆனால் இது ப்ரபத்யநுஷ்டாநாநந்தரம் ஏற்படுகிற ப்ரவ்ருத்தி நிவ்ருத்தியென்று சொல்லவொண்ணாதோ வென்னில், ராவணனாலே ஏற்பட்ட ஆபத்தைப் போக்குகைக்காக, பெருமாள் விஷயத்தில் தன்னுடைய உபாயாந்தரப்ரவ்ருத்தியை விட்டே சரணம்புகுந்தவளாகையால் அது அநுபபந்நமாம். மேலும், "ப்ரவ்ருத்தி நிவ்ருத்தி: ப்ரபத்தி:" என்கிற வாக்யத்தில், "பாவாந்தரம் அபாவ:" என்கிற ந்யாயத்தால் அந்த ப்ரவ்ருத்தி நிவ்ருத்தியே ப்ரபத்திக்கு விசேஷணமாக ஏற்படுவதாலும் அப்படிச்சொல்வது அநுபபந்நம்.

(தொடரும்.)

295

ஸ்ரீ:

ஸத்ஸம்ப்ரதாயம்.

நமது விசிஷ்டாத்வைத ஸித்தாந்தம் பண்டே தொட்டு ஸத்ஸம்ப்ரதாயமென்ற பெயரால் வழங்கப்பட்டு வருகிற விஷயம் யாவருமறிவர். பொன்வாணிகன் பலவகை மாற்றுள்ள பொன்களை உரைகல்லில் உரைத்து இதனினிது சீரிது என்று எடுத்துக் காட்டுவதுபோல, இந்த ஸத்ஸம்ப்ரதாயம் வந்த வரலாற்றையும், இதன் பெயர்க்காரணம் சீர்மை முதலியவற்றையும் எடுத்துரைப்பதன்முன் பிற (ஸம்ப்ரதாயங்கள்) சமயங்கள் வந்த முறைமைகளை எடுத்து விளக்கி அதன்பின் இதன் உண்மையைக் கூறுதல் மிகவும் நன்றுமாதலால் முன்னதாக இங்குப் பிற சமயங்கள் தோன்றிய வரலாறு எடுத்துரைக்கப்படுகிறது.

"வணங்குந்துறைகள்பலபலவாக்கிமதிவிகற்பாற்
பிணங்குஞ்சமயம்பலபலவாக்கியவையவைதோ
றணங்கும்பலபலவாக்கிநின்மூர்த்திபரப்பிவைத்தா
யிணங்குநின்னோரையில்லாய்..........."

என்றபடி ஸர்வேசுவரன், அதிகாராநுகுணமாக அவரவர் தமதம தறிவுக்கேற்றபடி ஸமய பேதங்களையும், சாஸ்திரங்களையும், உபதேசிப்பவர்களையும், தெய்வங்களையும் உண்டாக்கினான். பல சமயங்களையுண்டாக்குகின்றவிடத்தில் ஒவ்வொருவரைக்கொண்டு ஒவ்வொரு சமயத்தை உண்டுபண்ணுகிறான். இதனால் ஒவ்வொரு சமயத்திற்கும் கர்த்தா வெவ்வேறுண்டென்பது பெறப்படும்.

ப்ருஹ்மா ஒரு சமயத்தில் ருத்ரன் அக்னி முதலானவரின் பெருமைகளையும், மற்றோர் சமயத்தில் தன்னுடைய பெருமையையும் பித்ருக்கள் ஸரஸ்வதி இவர்கள் பெருமைகளையும் எடுத்துரைத்தான். ஓர் நற்குணங்தோன்றிய காலத்தில் ஸர்வேசுவரனுடைய பெருமையை விளக்கிப் பேசுவதுமுண்டு. இத்தகைய நற்சமயத்தில் ஸ்ரீ வால்மீகி பகவானைக் கடாக்ஷித்தானாதலால் அவர் வாயினின்றும் ஸர்வேசுவரன் பெருமையை எடுத்துரைக்கின்ற ஸ்ரீ ராமாயணந் தோன்றிற்று. சிவபிரான் ஒருசமயத்தில் சிவாகமம் பலவற்றையும் உண்டு பண்ணி மற்றோர் சமயத்தில்,

"ஆலகீழற்கீழறநெறியைநால்வர்க்கு
மேலையுகத்துரைத்தான் மெய்த்தவத்தோன்—ஞாலம்
அளந்தானையாழிக்கிடந்தானையால்மேல்
வளர்ந்தானைத்தான்வணங்குமாறு"

என்றபடி ஆலமரத்தடியில் அகஸ்தியர், புலஸ்தியர், தக்ஷர், மார்க்கண்டேயர்களான நால்வர்க்கும் ஸர்வேசுவரனை வணங்கும் மார்க்கத்தை உபதேசித்தான். இந்த நால்வரில் புலஸ்தியரின் சிஷ்யரான ஸ்ரீ பராசர பகவான் வாயிலாக ஸர்வேசுவரனையே பரதேவதையாகச் சொல்லுகிற ஸாத்விக ஸ்மிருதி தோன்றிற்று.

இதுநிற்க, ஸர்வேசுவரன் தன் ஸ்வதந்த்ர சக்தியால் பௌத்தாவதாரஞ்செய்து திரிபுரத்திற்புகுந்து அங்குள்ளவர்களுக்குப் புத்தமதோபதேசஞ் செய்தான். ஸர்வேசுவரனுக்கு 'ஸம்ஸாரி சேதனர்களை உய்விக்கவேண்டும்' என்ற அருளுண்டானகாலத்தில் ஸ்ரீ வதரியாச்ரமத்தில் தானே நரனாகிய சிஷ்யனாகவும், நாராயணனாகிய ஆசார்யனாகவும் நின்று திருமந்த்ரத்தை வெளியிட்டான். இதனால் ப்ருஹ்மாதிகள் சமயபேதத்தாலும், ஸர்வேசுவரன் தன் ஸ்வந்த்ர சக்தியாலும், அருளாலும் உபதேசிக்கப்பட்ட உபதேசங்களைக் கையாண்டு திரியும் சமயத்தவரும் பலராவாரென்று அறியத்தக்கது. இனி ஸத்ஸம்ப்ரதாயத்தின் வரலாறு எடுத்துரைக்கலாகும்.

இது, ஸத்+ஸம்+ப்ர+தாயம். ஸத்ஸம்ப்ரதாயம் என்று நான்கு பதங்களாகப் பிரிக்கப்பெறும். ஸத்—ப்ருஹ்மத்தை யறிந்தவரில் சிறந்தவரால். ஸம்—நன்மையுற்றதாயும். ப்ர—முதன்மையுற்றதாயுமிருக்கிற (பொருள்) தாயம்-கொடுக்கப்பட்டதாம். இங்குத் தாயம் என்ற சொல்லிற்கு ஸம், ப்ர என்ற இரண்டு பதங்கள் அடைமொழிகளாக நின்றன. இவை உபஸர்க்கமென்று வழங்கலாகும். ப்ர என்ற உபஸர்க்கம் சிறப்புப்பொருளைக் குறிப்பிடும். சிறப்புடையதொன்றே முதன்மை பெற்றிருக்குமாதலால் இங்கு ப்ர என்பதற்கு முதன்மையுற்ற என்று பொருளுரைக்கப்பட்டது. கொடுக்கப்பட்டதாம் என்பதற்கு அவரால் உபதேசிக்கப்படுவதாம் என்று பொருளுரைத்துக்கொள்க. ப்ருஹ்மாதிகள் சமயபேதத்தால் பல்வேறு வகையாக உபதேசிப்பதும், ஸர்வேசுவரன் நிக்ரஹாநுக்ரஹ காலங்களில் வெவ்வேறாக உபதேசிப்பதும் போலில்லாமல் ப்ருஹ்மவித்துக்கள் தாமறிந்தபடி உள்ளவாறு உபதேசிப்பவராதலால் இந்த உப

தேசத்தின் பெருமைதோன்ற நன்மையும் முதன்மையுமுற்ற உபதேசம் என்று சொல்லப்பட்டது. ஆக ஸத்ஸம்ப்ரதாயம் என்பதற்கு நன்மையும் முதன்மையுமுற்ற அறப்பெரியாரின் உபதேசம் என்பது போந்தபொருளாம்.

இனி ப்ருஹ்மத்தையறிந்தவரிற் சிறந்தவர் இன்னார் என்பதுரைக்கப்படும். ஸர்வேசுவரன், "சோம்பாது இப்பல்லுருவை யெல்லாம் படர்வித்த" என்றபடி உழுதொழிலுடையான் தான்செய்த உழுதொழிலால் பயனடையாதொழிந்தாலும் மறுபடியும் அத்தொழிலையே செய்வதுபோல கல்பந்தோறும் சிருஷ்டித்துப் பயனடையாதொழிந்தாலும் 'இதனால் என்ன ப்ரயோஜனம்' என்று அத்தொழிலை நீக்கிவிடாமல் 'எப்பொழுதாவது பல ஸித்தியுண்டாகாதா' என்று அத்தொழிலை மிகவும் முயன்றுசெய்து சாஸ்திரங்களை வெளியிட்டு அவதாரங்களையுஞ் செய்தான். அதன்பின் 'உலகிலுள்ள எவரேனும் ஒருவரைக் கொண்டு உலகினரை நல்வழிப்படுத்தவேண்டும்' என்று திருவுள்ளங்கொண்டு நம்மாழ்வாரை விசேஷகடாக்ஷஞ் செய்து அவருக்குத் தன்னியல்புகளை யெல்லாம் விளங்கக்காட்டி நித்ய விபூதியாகிய பரமபதத்திற்செய்யும் விருப்பமெல்லாம் இவர் விஷயத்திற் செய்தான். அதனால் இவர் ஸர்வேசுவரன் இயல்புகளை உள்ளவாறறிந்து மகிழ்ச்சிகொண்டு

"புவியுமிருவிசும்பும்நின்னகத்தநீயென்
செவியின்வழிபுகுந்தென்னுள்ளாய்—அவிவின்றி
யான்பெரியன்நீசிறியையென்பதனையாரறிவார்
ஊன்பருகுநேமியினாயுள்ளு"

என்றபடி ஸர்வேசுவரனை நோக்கி இந்த உலகமும், நித்ய விபூதியாகிய பரமபதமும் உன்னுடைய ஸங்கல்பத்திலடங்கிக் கிடக்கின்றன; இத்தன்மை யுடையவனாகிய நீ என் காதின்வழியாகப் புகுந்து இடைவிடாது என் ஹ்ருதயத்துள்ளிருக்கின்றாய். இவ்வாறானபின் உலகினையுடைய நீ பெரியையோ? உலகையுடையனாகிய உன்னையுடைய யான் பெரியனோ? என்று யாரறிவார் இதை சக்திமானாகிய நீயே ஆராய்ந்துபார். என்று பேசும் பெருமையுடையவரானார். இது நிற்க, இவர் மாயையை வென்று ஸம்ஸாரிகளின் உறவை ஒழித்து

29

“உண்ணுஞ்சோறும் பருகுநீரும் தின்னும் வெற்றிலையுமெல்லாம், கண்ணன்...” என்று தாரக போஷகபோக்ய வஸ்துக்களெல்லாம் ஸர்வேசுவரனெனக்கொண்டு இராப்பகலென்ற வேறுபாடறியாமல் எல்லாக் காலங்களிலும் அவனை யநுபவிப்பதே யாத்திரையாகக் கொண்டிருந்தார். ஆதலால் இவரே ப்ருஹ்மத்தை யறிந்தவரில் சிறந்தவராவார். இங்கு ‘ஸத்’பதத்தால் குறிப்பிடப்பட்டவரும் இவரே யென்று அறிந்துகொள்ளத்தக்கது.

இனிமேல் இவரால் உபதேசிக்கப்பட்ட பொருளின் பெருமை உரைக்கப்பெறும்.

“இழைத்தாரொருவருமிலாமறைகளையின்றமிழாற்
குழைத்தார்..............”

என்றபடி எவராலும் செய்யப்படாத வேதத்தின் ஸாரமானதும், ஸர்வேசுவரனுக்குந் தெவிட்டாத் தெள்ளமுதா யிருப்பதும், தனத்தாலும், ஜாதியாலும், கல்வியாலும் ‘யாம் பெரியோம்’ என்றிருக்கும் மதத்தையடக்கும் அங்குசம் போன்றதும், ஜ்ஞாநஸம்பத்தைக் கொடுக்கவல்லதுமான திருவாய்மொழி முதலிய ப்ரபந்தங்களாம். இப் பிரபந்தங்களில், ஆழ்வாரால் ஸர்வேசுவரன் இயல்புகளை யெல்லாம் அவனருளால் தாம் கண்டபடி உள்ளவாறு எடுத்துரைக்கப் பெற்றுள்ளன. இங்கு ‘ஸம்’, ‘ப்ர’ என்ற சொற்களால் சொல்லப்படும் நன்மையும், முதன்மையுமுற்ற உபதேசமென்பது இப் பிரபந்தங்களிற் கூறப்படும் உபதேசமாம் என்று தெளியத்தக்கது. இதுவரையுங் கூறியதினால் ப்ருஹ்மத்தை யறிந்தவரிற் சிறந்தவர் இன்னாரென்பதும், அவரால் உபதேசிக்கப்பட்ட பொருள் இப்படிப்பட்டதென்பதும் உரைக்கப்பட்டன.

இனி ஆழ்வார் இன்னாருக் குபதேசித்தாரென்பதுரைக்கப் பெறும். ஸ்ரீமந் நாதமுனி எழுந்தருளியிருந்த திவ்யதேசத்திற்கு மேல்நாட்டிலிருந்து சில ஸ்ரீவைஷ்ணவர்கள் எழுந்தருளி மன்னனாரை ஸேவித்து நின்று

“ஆராவமுதேயடியேனுடலம்நின்பாலன்பாயே
நீராயலைந்துகரையவுருக்குகின்றநெடுமாலே

சீரார்செந்நெல்கவரிவீசும்செழுநீர்த்திருக்குடந்தை
ஏரார்கோலந்திகழக்கிடந்தாய்கண்டேனெம்மானே"

என்ற பாசுரந்தொடங்கி,

"உழலையென்பில்பேச்சிமுலையூடவளையுயிருண்டான்
கழல்களவையேசரணாகக்கொண்டகுருகூர்ச்சடகோபன்
குழலின்மலியச்சொன்னவோராயிரத்துளிப்பத்தும்
மழலைதீரவல்லார்காமர்மானேநோக்கியர்க்கே"

என்ற பாசுரமுடிவாக அநுஸந்தித்தார்கள். அப்பொழுது நாதமுனி கேட்டு மிகவும் மகிழ்ச்சிகொண்டு ஸ்ரீவைஷ்ணவர்களை நோக்கி நீங்கள் அநுஸந்தித்த பாசுரமுடிவில் 'ஆயிரத்துளிவைபத்தும்' என்று வந்துளதே உங்களுக்கு ஆயிரம் பாசுரமும் தெரியுமா; உங்களூரில் இந்த ப்ரபந்தமிருக்கின்றதா? இவை முற்றும் ஓதியுணர்ந்தார் வேறு எவரேனுமுண்டோ? என்று கேட்டார். அதற்கவர் அடியோங்கட்கு இந்தப் பத்துப்பாட்டு மாத்ரமே தெரியும்; எங்களூரிலும் இந்த ப்ரபந்தமில்லை; இவை முற்றிலும் ஓதியுணர்ந்தாருமில்லை; என்றார்கள். இவர், அவர்களுக்கு மன்னருடைய தீர்த்தப்ரஸாதம் ப்ரஸாதிப்பித்து உபசரித்தனுப்பினர். அதன்பின் நாதமுனி 'இந்த ப்ரபந்தம் ஆழ்வார் திருவவதரித்தருளிய திவ்யதேசத்தி லிருக்கவேண்டும்' என்று திருநகரிக் கெழுந்தருளி அங்குள்ள ஸ்ரீ மதுரகவியாழ்வாரின் சிஷ்யப்ரசிஷ்யரான ஸ்ரீ பராங்குசதாஸரை ஸேவித்து 'இவ்விடத்தில் திருவாய்மொழி ஓதினவர்களுண்டோ? ப்ரபந்தமுண்டோ?' என்று கேட்டார். அப்பொழுது அவர் "இப் பிரபந்தம் ஓதியுணர்ந்தாருமில்லை; இப் பிரபந்தமும், மற்றப் பிரபந்தமும் இங்கில்லை; அவை நடைபெறுதொழிந்த நாள்களும் பலவாயின. இது நிற்க, எங்களாசார்யர் அடியேனுக்கு 'கண்ணிநுண் சிறுத்தாம்பு' என்ற ப்ரபந்தத்தை உபதேசித்தருளி "இக் கண்ணிநுண் சிறுத்தாம்பை ஆழ்வார் திருமுன்பேயிருந்து ஒரே சிந்தையுடன் தியானித்துப் பன்னீராயிரமுரு அநுஸந்தித்தால் ஆழ்வார் ப்ரஸந்நராவார்." என்று அருளிச்செய்தாரென்றார். நாதமுனி 'அந்தத் திவ்யப்ரபந்தத்தை அடியேனுக்கு உபதேசித்தருளவேண்டும்' என்று தண்டன் ஸமர்ப்பித்து நின்றார். அவரும் உகப்புடனே உபதேசித்தருளினர். நாதமுனியும், அவ் வுபதேசத்தைப் பெற்றுத் திருப்புளி யாழ்வாரடியில் ஆழ்வார்

திருமுன்பே 'கண்ணிநுண் சிறுத்தாம்பைப்' பன்னீராயிரம் உரு அநுஸந்தித்தார். ஆழ்வாரும் உகந்து ப்ரஸந்நராய் நாதமுனியை நோக்கி 'நீர் இவ்வாறு உபாஸிப்பதற்குக் காரணம் யாது?' என்று கேட்டருளினர். நாதமுனி 'அடியேனுக்குத் திருவாய்மொழி முதலான திவ்யப்ரபந்தங்களை உபதேசித் தருளவேண்டும்' என்று விண்ணப்பஞ்செய்தார். ஆழ்வார் தமக்கு ஸர்வேசுவரன் 'மயர்வற மதிநலம்' அருளப்பெற்றதுபோல நாதமுனிகளுக்குத் திவ்யஜ்ஞானத்தைக் கொடுத்து 'ரஹஸ்ய த்ரயத்தையும், திருவாய்மொழியையும், மற்றுமுள்ள மூவாயிர ப்ரபந்தங்களையும், மற்ற சமயங்களின் தாற்பர்யங்களையும், அஷ்டாங்கயோக ரஹஸ்யத்தையும் ப்ரஸாதித் தருளினர். அதனால் நாதமுனிகளும் ஸர்வஜ்ஞராய் விளங்கினர். ஸர்வேசுவரனுடைய விசேஷ கடாக்ஷத்தைக் காட்டிலும் ஸ்வாதந்த்ர்யம் சிறிதும் கலப்பில்லாத ஆழ்வாருடைய விசேஷ கடாக்ஷம் மிகவும் சிறந்ததென்று அறியத்தக்கது.

நாதமுனிகள் தாம் ஆழ்வார் அநுக்ரஹத்தால் பெற்ற அர்த்த விசேஷங்களைத் தம் அந்தரங்க சிஷ்யர்களான உய்யக் கொண்டார் குருகை காவலப்பன் என்ற இவர்களுக்கு உபதேசித்தார். இவ்விருவருள் உய்யக்கொண்டார் மணக்கால்நம்பிக்கும், மணக்கால்நம்பி ஸ்ரீ ஆளவந்தாருக்கும் ஸ்ரீ ஆளவந்தார் பெரியநம்பிக்கும், பெரியநம்பி ஜகதாசார்யராய் விளங்கிய ராமாநுஜருக்கும் உபதேசித்தார்கள். 'உலகெங்கும் இந்த ஸத்ஸம்ப்ரதாயம் பரவவேண்டும்' என்ற அபார கருணையால் ஸ்ரீ ராமாநுஜாசார்யர் எழுபத்துநான்கு ஸிம்ஹாஸநாதிபதியாரை நியமித்து அவர்கள் வாயிலாக இதை வெளியிட்டார். அதன்பின் ஸ்ரீ ராமாநுஜாசார்யரின் அபரா (பின்ன)வதாரமான ஸ்ரீ மணவாளமாமுனிகள் அவதரித்து அஷ்ட திக்கெஜங்களை நியமித்து அவர்கள் வாயிலாக இதை வெளியிட்டார். எழுபத்துநான்கு ஸிம்ஹாஸநாதிபதியரின் பரம்பரையைப்பற்றியும், அஷ்ட திக்கெஜங்களாகிய ஆசார்ய பரம்பரையைப்பற்றியும் வருகிற நம்மாசார்யர்களால் இப்பொழுதும் உபதேசிக்கப்பட்டு வருகிறதும் ஸத்ஸம்ப்ரதாயமேயாம்.

இன்னும் இந்த ஸத்ஸம்ப்ரதாயத்திற்கோர் பெருமையுண்டு. அஃதாவது- தம் உக்தியாலும், பிரமாண விரோதமாயும் ஒன்றுஞ்

சொல்லாமல் கூடஸ்தரால் ஓதுவிக்கப்பட்ட விஷயத்தையே சொல்லுகையாம். இதனல் ப்ருஹ்மத்தை யறிந்தவரிற் சிறந்தவராகிய ஆழ்வாரால் உபதேசிக்கப்பட்ட உபதேசமும், இப்பொழுது நம்மாசார்யர்களால் உபதேசிக்கப்பட்டுவருகிற உபதேசமும் ஒன்றேயாமென்றறியத்தக்கது.

"முன்னோர்மொழிந்தமுறைதப்பாமற்கேட்டுப்
பின்னோர்ந்துதாமதனைப்பேசாதே—தன்னெஞ்சில்
தோற்றியதேசொல்லியிதுசுத்தவுபதேசவா
லாற்றதென்பர்மூர்க்கரா்வார்"

என்று மணவாளமாமுனிகள், முன்னோர்களால் ஓதுவிக்கப்பட்ட அர்த்தவிசேஷங்களை முறைசிறிதும் தவறாமல் கேட்டு அவற்றை மனனஞ்செய்து அப்படியே பிறருக்குபதேசஞ் செய்கையே ஸுத்த உபதேசமாகிய ஸத்ஸம்ப்ரதாயமாம். அவ்வாறின்றித் தன்னெஞ்சில் தோற்றியபடியெல்லாம் பிதற்றி 'இது ஸத்ஸம்ப்ரதாயமாம்' எனல் ஸத்ஸம்ப்ரதாய மாகாதெனவும் அருளிச்செய்ததும் இதனை வலியுறுத்தும்.

ப. — அ.

ஸ்ரீ:

ஸ்ரீ வைஷ்ணவ தத்வ திவாகரம்.

(217-ம் பக்கத் தொடர்ச்சி.)

சும:— ஸ்வாமி! தேவரீர் ஸாதித்த க்ரமத்தால் எழுபத்துநான்கு ஸிம்ஹாஸநாதிபதிகளாகிய ஆசார்யர்களைத் தவிர மற்ற ஆசார்யர்கள் ஆசார்ய பதவியை வஹிக்கக்கூடாதென்பது விளங்குகிறது. இதுநிற்க, எழுபத்துநான்கு ஸிம்ஹாஸநாதிபதிகளிற் சேராத உடையவர் திருவடிகளில் ஆச்ரயித்த ஸந்யாஸிகளும் ஆசார்யபதவியை வஹித்துவருகிறார்களே; அது எவ்வாறு பொருந்தும்?

சுகு:— நீ கூறியது உண்மையே. உடையவர் சில ஸந்யாஸிகளைத் திவ்யதேசங்களைப் பாதுகாத்து வரும்படி நியமித்தார். அவர்கள் ஆசார்ய நியமனத்தால் அக் கைங்கர்யத்தையே தமக்குப் பரம ப்ரயோஜனமாகக்கொண்டு அநுஷ்டித்து வருகிறார்கள். அவர்களுக்குக் கைங்கர்யமே ப்ரதானம் மற்றது அப்ரதானம். அதனால் அவர்களுக்கு ஸந்நிதி ஸ்ரீகார்யத்தைத் தவிர வேறு அவகாசமில்லாததினால் அவர்கள் ஸமாச்ரயண மந்த்ரோபதேசார்த்தமாகக் காலத்தைப் போக்குவதில்லையேயன்றி அவர்களுக்கு அந்த அதிகாரமில்லை யென்பதில்லை. அவகாசம் நேர்ந்தால் தம்மை யடைந்தவரின் ருசிக்கும், பக்திக்கும் தகுதியாகக் கடாக்ஷிப்பார்கள். இதனால் நீ கேட்ட ஆசார்ய விஷயமான முதற்கேள்விக்குச் சமாதானம் சொல்லப்பட்டதாயிற்று, இனி இரண்டாம், மூன்றாம் கேள்விகளாகிய க்ருஹஸ்த ஸந்யாஸி விஷயத்திற்கு விடையளிக்கலாகும்.

ஆசார்யன் க்ருஹஸ்தனாகவும், ஸந்யாஸியாகவுமிருக்கலாம். ஸந்யாஸியாயிருக்கிற ஆசார்யனை ஆச்ரயிப்பதால் உயர்வென்பதும், க்ருஹஸ்தனாகிய ஆசார்யனை ஆச்ரயிப்பதால் தாழ்வென்பதும் வேற்றுமையில்லை. இனி நான்காவது கேள்வியாகிய பஞ்ச ஸம்ஸ்காரம் இன்னவென எடுத்து விளக்கப்படும்.

பஞ்ச ஸம்ஸ்காரமாவன:-

“தாப: புண்ட்ர ஸ்ததா நாம மந்த்ரோ யாகச்ச பஞ்சம:
அமீபரம ஸம்ஸ்காரா: பாரமைகாந்திய ஹேதவ:”

என்று சொல்லப்பட்டவையாம். அவற்றுள் தாபமாவது:— ஆசார்யன், சாஸ்திரவிசுவாசம் முதலிய சிஷ்யலக்ஷணம் பொருந்தியிருக்கிறதா? என்று நன்றாய்ப் பரீக்ஷிக்கப்பட்ட சிஷ்யன் தோள்மூலங்களில் பூர்வாங்கமான கிரியையைச் செய்து, விதிப்படி விர்த்திசெய்யப்பட்ட ஹோமாக்னியில் திருவிலச்சனையென்கிற ஸ்ரீ ஸுதர்சன பாஞ்சசந்யங்களைத் தப்தஞ்செய்து அலங்கரிக்கையாம். அநேக உலோகச் சேர்க்கை

யால் ஆபரணத்திற்கு யோக்யமில்லாதொழிந்த பொன்னை ஸ்வர்ணகாரகன் (தட்டான்) ஸ்புடஞ்செய்து ஆபரணமாக்கி ஸர்வேசுவரன் அணிந்துகொள்வதற்கு உரிமையாக்குவது போல இந்த ஆசார்யனும் அநேக தோஷங்களோடு கூடியிருக்கும் சிஷ்யனை இந்தத் தாபத்தால் சுத்தனாக்கி, மற்ற நான்கு ஸம்ஸ்காரங்களுக்கும், பகவத் பாகவதாசார்ய கைங்கர்யங்களுக்கும் யோக்யனாகும்படி செய்கிறான்.

இனி இரண்டாவதாகச் சொல்லப்பட்ட புண்ட்ரம் உரைக்கப்படும். இங்கே புண்ட்ரமென்றது மேல்நோக்கி நேராக இடுகிற ஊர்த்வபுண்ட்ரத்தை. இது, ஆசார்யன் தாபம் என்கிற ஸம்ஸ்காரத்தைச் செய்தபின் நெற்றிமுதல் பிடரிமுடிவாகப் பன்னிரு ஸ்தானங்களில் ஆசார்யனால் இடப்படுவதாம். சிலர் ஆசார்ய நியமனமில்லாமல் திருமண் காப்பைத் தரித்துக்கொள்வது பாணிக்ரஹணமில்லாத மாங்கல்யதாரணமும், ராஜாஜ்ஞையில்லாத சேவக வேஷமும்போலாகும். "தத்ரஹிதம் கர்மம் நிஷ்பலம்" என்ற ப்ரமாணத்தின்படி இதில்லாமல் ஸத்கர்மங்களைச் செய்தால் அவை வீணாகவொழியும். திருவிலச்சனை திருமண்காப்பைப்பற்றி பாத்மோத்தரத்தில் சிவன் பார்வதியைக் குறித்து "யேகண்டலக்ந துளஸி நளிநாக்ஷமாலா: யேபாஹுமூலபரிசிஹ்நித சங்கசக்ரா: யேவா லலாட பலகே லஸதூர்த்வ புண்ட்ரா:, தேவைஷ்ணவா: புவநமாசு பவித்ரயந்தி" என்றுரைத்ததாலும் அறியலாம். இதன் பொருள் பார்வதி! யாவர்கள் துளஸி, தாமரை மணிமாலைகளை யுடையவர்களோ யாவர்கள் புஜங்களில் சங்கசக்ரங்களால் நன்றாக அடையாளஞ் செய்யப்பட்டனவோ யாவர்கள் பலகைபோன்ற விசாலமான நெற்றியில் ஊர்த்வபுண்ட்ரமாகிய திருமண்காப்பு விளங்குகின்றதோ அவர்களே ஸ்ரீவைஷ்ணவரென்று சொல்லப்படுவார். இவர்களின் தரிசன(பார்வை) பரிசன(தொடுகை) ச்ரவண(கேட்கை மனன(நினைக்கை) இவைகளே சகல லோகத்தையும் பரிசுத்தமாக்கு மென்பதாம். இங்குக் குறிப்பிட்ட லோகம் என்ற சொல் லோகத்தில் வாழ்கின்ற ஜனங்களையுங்குறிக்கும்.

சும:— ஸ்வாமி! தேவரீர் அருளிச்செய்த ப்ரமாணசுலோகத்திலுள்ள முதலடியையும், இரண்டாமடியையும், மூன்றுமடியையும், தனித்தனியே பிரித்து இறுதியடியோடு பொருத்தினால் எவர்கள் கழுத்தில் துளஸி தாமரைமணிமாலைகள் விளங்குகின்றனவோ அவர்கள் வைஷ்ணவர்களாவார். எவர்கள் தோள்களில் சங்கசக்ரங்கள் விளங்குகின்றனவோ அவர்கள் வைஷ்ணவர்களாவார். எவர்கள் நெற்றியில் திருமண்காப்பு விளங்குகின்றதோ அவர்கள் வைஷ்ணவர்களாவார் என்று பொருள் கொள்ளலாகும். இவ்வாறு கொள்வதும் பொருத்தமானதே. அப்படியிருக்கத் திருவிலச்சனையில்லாத திருமண்காப்பினால் பிரயோஜனமில்லையென்று அருளிச்செய்தது எவ்வாறு பொருந்தும்?

சுகு:— இந்த சுலோகத்திற்கு நீ கூறியபடி பொருள்கொள்ளலாகாது. பிதா சிறந்தவனென்றும், புத்திரன் சிறந்தவனென்றும் கூறினால் ஒருவரைக் காட்டினும், ஒருவர் சிறந்தவரென்று பொருள் கொள்ளலாகாது. பிதா புத்ர சப்தங்கள் ஒன்றுக்கொன்று ஸம்பந்தமுடைய சொல்லாதலால் இருவரும் சிறந்தவரென்றே பொருள் கொள்ளவேண்டும். பிதாவில்லாமல் புத்திரனும், புத்திரனில்லாமல் பிதாவுமில்லாததுபோல இவ்விடத்திலும் இவ்வைந்து ஸம்ஸ்காரங்களும், அங்காங்கிபாவத்தால் ஒரு ஸம்பந்தமுடையனவாதலால் ஒன்றைவிட்டு ஒன்றைப் பிரித்துப் பொருள் கொள்ளலாகாது. எல்லாம் சேர்த்தே பொருள் கொள்ளத்தக்கது.

[தொடரும்.]

305

ஸ்ரீ:

திருக்குறட்பொதுமை.

(முதல்தொகுதி 207-ம் பக்கத் தொடர்ச்சி.)

வைதிகமார்க்கச் சார்பினரான திருவள்ளுவர் உரைத்த திருக்குறள் இன்ன நோக்குடையதென்பது சங்கமருவிய சான்றோர் வாக்யங்களால் முன்னெடுத்து விளக்கப்பட்டது. இன்னும் அவர்கள் வாக்யங்களை ஆராய்ந்துபார்க்குமிடத்தில் "பண்டைமறை நேர்வன மற்றில்லைபிற" என்றும், "நான்மறையின் மெய்ப்பொருளை" என்றும், "மெய்யாயவேதப்பொருள்" என்றும், "செய்யாமொழிக்கும்" என்றும், "வேதப்பொருளாய் மிக விளங்கி" என்றும், "தாமே தமைப் பயந்த வேதமே மேதக்கன" என்றும், 'வேத விழுப்பொருளை" என்றும், "தப்பாதவருமறை" என்றும் வேதத்தையே சிறந்த ப்ரமாணமாகக் கொண்டுள்ளார்களென்பது விளங்கும்.

இங்கு இவர்கள் திருக்குறளின் பெருமையைத் தெரிவிப்பதற்கு வேதத்தைச் சிறந்த ப்ரமாணமாகக் கூறி 'இது அதனோடு ஒப்பாகும்' என்றார்களாதலால் திருக்குறளின் சிறப்பை அறிவதற்கு முன் வேதத்தின் பெருமையை உணர்ந்துகொள்ளவேண்டியதும் நமது கடமையாகும். ஆகவே, இங்கு வேதத்தின் இயல்புகளை எடுத்து விளக்கலாகும்.

வேதவ்யாஸபகவான் "வேதசாஸ்த்ராத் பரம் நாஸ்தி நதைவம் கேசவாத்பரம்" (வேதத்தின் மிக்கதோர் ப்ரமாணமில்லை கேசவனின் மிக்கதோர் தெய்வமில்லை) என்றார். இங்கு ஸர்வேச்வரனுடைய பெருமை கூறவந்தவிடத்தில் கேசவநாமத்தால் கூறி அதனோடு ஒருசேர வேதத்தைக் கூறியதினால் கேசவனுக்குள்ள தன்மையெல்லாம் வேதத்திற்குண்டென்பதறியலாம். கேசவனென்ற சொல்லிற்கு க்லேஸத்தைப் போக்குமவன், கேசியென்ற அசுரனை ஒழித்தவன், பிர்ம்ம ருத்ரர்களுக்குத் தந்தையாயிருப்பவன், சிறந்த கூந்தலையுடையவன், என்ற நான்கு பொருள்களுள்ளன. இவற்றுள் முன்னிரண்டு பொருள்களால் ஸர்வேசுவரன் அகில ஹேயங்களுக்கும்

(எல்லா அல்பங்களுக்கும்) எதிர்த்தட்டானவனென்றும், பின்னிரண்டு பொருள்களால் கல்யாணகுணங்களை யுடையவனென்றும் கொள்ளத்தக்கன. வேதமும் அபௌருஷேயத்வ (புருஷனால் செய்யப்படாமை) நித்யத்வங்களாலே சிறந்து விளங்குந் தன்மையுடையதே. இதனால் எல்லாரினும் ஸர்வேசுவரன் சிறந்து விளங்குவது போல வேதமும் எல்லா ப்ரமாணங்களிலும் சிறந்துவிளங்குந் தன்மையுடையதென்பது பெறப்படும்.

வேதம் நித்யமாயுள்ளது, ஒரு புருஷனால் செய்யப்படாதது என்ற பொருள்கள் எவ்வாறு ஸித்திக்குமென்னில்? வேதம் என்ற சொற்பொருளை ஆராயவே ஸித்திக்குமென்க. இதன் பொருளாவது:- 'வேதஇதிவேத:' (அறியுமியல்புடையது) என்பதாம். இங்கு இன்னகாலத்தில் அறிந்தது என்று ஆராயப்படாமையால் எக்காலத்திலும் உள்ளதென்ப தறியலாம். எக்காலத்திலும் உள்ளதெனவே ஒரு புருஷனால் செய்யப்படாததென்பது தானே கிடைக்கிறது.

*"அநாதி நிதநாஹ்யேஷா வாகுத் ஸ்ருஷ்டா ஸ்வயம்புவா
ஆதௌ வேதமயீ திவ்யா யதஸ்ஸர்வா: ப்ரஸூதய:"

என்றதனால் ஸ்வயம்புவாகிய ஸர்வேசுவரன் வாக்கினின்று வேதம் உண்டாயிற்றென்று சொல்லப்பட்டபடியால் வேதம் ஒரு புருஷனால் செய்யப்படாததென்று சொல்வது எவ்வாறு கூடுமெனின்? மஹாஸம்ஹாரகாலத்தில் ஸர்வேசுவரன் வேதங்களையெல்லாம் ஒன்றொழியாமல் நினைத்துக்கொண்டிருந்து பின் ஸ்ருஷ்டிகாலம் வந்தவுடன் அவற்றை பிர்ம்மாவுக்கு உபதேசிக்கின்றான். இம்முறையை யுட்கொண்டு ஸர்வேசுவரன் வாக்கினின்று வேதமுண்டாயிற்றென்று கூறுவதோர் வழக்குண்டு; ஆதலால் கூடுமென்க.

---

* இதன் பொருள்:- யாதொரு வாக்கினால் எல்லா ஜகத்தினுடைய உற்பத்தியறியலாம்படியிருக்கும்; வேதஸ்வரூபியாய், எல்லா ப்ரமாணங்களிலும் சிறந்ததாய், உற்பத்தி நாசங்களற்றதாயிருக்கிற இந்த வாக்கானது, ஆதியில் ஸ்வயம்பு என்ற பெயரையுடைய ஸர்வேசுவரன் வாக்கினின்றும் உண்டாயிற்றென்பதாம்.

புருஷன் முக்குணவசத்தால் தடுமாற்றமுற்று அறியாமை, வஞ்சனை, மறதி, அசக்திகளையுடையவனு யிருப்பான். இவனுல் செய்யப்பட்ட சாஸ்திரமும் இந்தத் தோஷங்களை யுடையதாயிருக்கும். வேதம் ஒரு புருஷனுல் செய்யப்படாததினுல் இத் தோஷங்களற்றதாய் விளங்கும். ஆகையால் வேதத்திற் சொல்லப்பட்டவை யெல்லாம் ஸத்யங்களாம். இதுபற்றியே இங்கு, "தப்பாவருமறை" என்றும், "மெய்யாயவேதம்" என்றும், "செய்யாமொழி" என்றும், "வேதவிழுப்பொருள்" என்றும் கூறினுர்கள். பிறரை வருத்துகின்ற சேநயாகம் முதலியவற்றையும் வேதம் விதித்திருக்கிறபடியால் வேதத்திற் சொல்லப்பட்டவையெல்லாம் நன்மையாகக் கொள்வதெப்படியெனின்? வேதம் கண்ணுக்குப் புலப்படாத ஸர்வேசுவரன் இயல்புகளையும், மோக்ஷத்தின் தன்மைகளையும், பிறவற்றையும் உரைத்தன. இவையெல்லாம் உண்மையென்று நம்புவதெப்படி? என்று சந்தேகங் கொள்வாரின் சந்தேகத்தை ஒழிப்பதற்குப் பிரத்யக்ஷபலனுகிய சேநயாக முதலியவற்றை விதித்தது. சேநயாகத்தால் சத்ருக்கள் நாசம் பிரத்யக்ஷ ஸித்தமாயறிந்ததொன்றும்.

இன்னும் மற்ற நூல்களெல்லாம் வேதத்தை மூலப்ரமாணமாகக்கொண்டு ஜீவிக்கின்றன. வேதம் ஸ்வத: ப்ரமாணமுடையதாயிருக்கும். அஃதாவது தனக்குத்தானே ப்ரமாணமுடையதாயிருக்குமென்பதாம். இது பற்றியே இங்கும் "தாமே தமைப்பயந்த வேதமே மேதக்கன" என்று சொல்லப்பட்டது. வேதச்சார்பல்லாத நூல்களெல்லாம் பெரியோர்களால் அங்கீகரிக்கப்படமாட்டா. இது நிற்க,

"தர்மம் ஜிஜ்ஞாஸமாநாநாம் ப்ரமாணம் ப்ரதமம் ச்ருதி:
த்வீயம் தர்மசாஸ்த்ரம்ஹி த்ருதீயம் லோகஸங்க்ரஹ:

என்றபடி தர்மத்தை யறியவேண்டுமென்ற விருப்புடையாரெல்லாம் வேதத்தையே முக்ய ப்ரமாணமாகக்கொள்ளவேண்டும். இத்துணைப் பெரும் சிறப்புடைய வேதம், பூர்வபாகம், உத்தரபாகமென்ற இரண்டு பிரிவினையுடையதாயிருக்கும். இவற்றுள் பூர்வபாகம், ஈசு

வரனுடைய ஆராதன ஸ்வரூபங்களேயும், உத்தரபாகம், ஈசுவர ஸ்வரூபங்களேயும் வெளியிடும். பூர்வபாகத்தின் அர்த்தங்களேத் தெளிவாயுணர்த்துவன தர்மசாஸ்திர முதலியவைபாம். உத்தரபாகத்தின் அர்த்தங்களேத் தெளிவாயுணர்த்துவன இதிஹாஸ முதலியவையாம். இத்திருக்குறளும் பூர்வபாகார்த்த விளக்கமான தர்மசாஸ்திரமென்பதே சான்றோர்களின் கொள்கையாம். இனித்திருக்கு ள் வேதார்த்தத்தை வெளியிடுகிற தென்பதைத் திருக்குறள் வாக்யங்களால் ஆராயலாகும்.

இதுவரையுங் கூறியதினல், திருக்குறளின் பெருமையை விளக்குதற்குச் சான்றோர்கள் வேதப்ரமாணத்தை முக்யமாகக் கொண்டார்களென்பதும், வேதம், எப்பொழுதுமுள்ளதாயும், ஒரு புருஷனல் செய்யப்படாததாயுமுள்ளதென்பதும், அதிற் சொல்லப்படும் பொருளெல்லாம் உண்மைகளாமென்பதும், தர்மத்தை யறிய வேண்டுமென்ற விருப்புடையாரெல்லாம் வேதத்தையே முக்யப்ரமாணமாகக்கொள்ள வேண்டுமென்பதும், வேதம் பூர்வபாகம், உத்தரபாகமென்ற இரண்டு பாகங்களே யுடையதாயிருக்கு மென்பதும், திருக்குறள் பூர்வபாக விளக்கமான தர்ம சாஸ்திர மென்பதும் உரைக்கப்பட்டன.

(தொடரும்.)

ஸ்ரீ:

பாகவத உச்சிஷ்டம்.

பாகவத உச்சிஷ்டமாவது:— பகவத் ஸம்பந்திகளான பெரியார் உண்டுகழித்தசேஷா (மீத) ந்நமாம். இதைப்பற்றி,

“வானுளாரறியலாகாவானவாவென்பாகில்
தேனுலாந்துளபமாலைச்சென்னியாவென்பாகில்
ஊனமாயினகள்செய்யும்ஊனகாரகர்களேனும்
போனகஞ்செய்தசேடந்தருவரேல்புனிதமன்றே”

என்று அருளிச்செய்தார். இதன் பொருள் ஞானம் பிறப்பதற்கு முன் தங்கள் வயிறு . வளர்ப்பதற்காகப் பிறரைக்கொன்றும்,

கொல்வித்தும் திரிந்தகொடியவராஞலும் பிர்ம்மா முதலானவர் காளல் அறியவொண்ணுத பரமபதவாசனே! தேன்றுளிக்கும் திருத்துழாய் மாலையுடையவனே! என்று சொல்லுவார்களாகில் அவரேசிரியர். அவர்கள் அமுதுசெய்து மிகுந்த ப்ரஸாதத்தை க்ருபையோடு கொடுப்பார்களாகில் அது அப்பொழுதே பரிஸுத்தத்தைத் தருமன்ருே என்பதாம். இதனுல் பெரியோர்கள் மனங்களிப்புற்றுத் தருகிற போனகமே கொள்ளத்தக்கதென்பதும், அவர்களிடத்தில் வலிந்துபெற லாகாதென்பதும் விளங்குகின்றன.

ஒரு நாள் பட்டர் தம்சிஷ்யராகிய நஞ்சீயர் தம்விஷயத்தில் அன்போடு பணிவிடை செய்ததற்குகப்புற்றுத் தாமமுதுசெய்த ப்ரஸாதத்தின் சேஷத்தை அவருக்களித்தார். அவரும் உகப்புடன் பெற்று 'அடியேன் உஜ்ஜீவித்தேன்' என்ருர். இந்த வரலாற்ருலும் பெரியார் உகந்துகொடுத்த ப்ரஸாதமே உத்தேசியமென்பதறியலாம். இன்னும் இதற்குச் சிலவரலாறு எடுத்துரைக்கப்படும்.

வேதவ்யாஸபகவான் ஒரு நாள் ஸரஸ்வதி நதிக்கரையை அடைந்து,

"நிலவரைப்பினிலுறைபவர்நெஞ்சகந்தெருளப்
பலவுரைத்தனம்புராணநூல்பாரதந்தெரித்தேம்
மலைவறப்பழமறைவகுத்துரைத்தனமென்னே
இலகியெம்முளந்தெருடாப்பெற்றிலமின்னும்"

"வரிச்சுரும்பிமிர்வண்டுழாய்முகில்கதையினிது
விரித்திலேமினிவிளங்கயாம்விரிக்குவமென்னக்
கருத்தினெண்ணினனிருந்துழிக்கனிந்ததெள்ளமுதைச்
சிரித்தவின்னிசையாழ்முனியவ்வழிச்சேர்ந்தான்"

என்றபடி உலகிலுள்ளவர்களின் உள்ளந்தெளிவடைய பலபுராணங்களையும், பாரதத்தையு முரைத்ததோடு வேதங்களையு முறைப்படுத்திக் கூறினேம்; இன்னும் மனங்கனிவுற்றுத் தெளிவடையவில்லையே காரணம் யாதோ? இதுவரை ஸர்வேசுவரன் குணவிசேஷங்களைக் கூறுகின்ற சரிதத்தைத்தனியே ஒன்றும் செய்தோமில்லை; இனியாவது ஸர்வேசுவரன் சரிதத்தை விளங்க விரித்துரைக்கக் கடவோம்.

என்று கருதியகாலத்தில் அவ்விடத்திற்கு நாரத பகவான் வந்தனர். அப்பொழுது நாரதர் வேதவ்யாஸரை நோக்கி நீர் ஆராயத்தக்க பல நூலுரைத்தீராயினும், பக்தியோடு எம்பெருமானுடைய சரிதத்தைக் கூறினீரில்லை. இது நிற்க, நான்முகன் தன்னோடு தேவருல கோடியிர் படைத்தவனாகிய ஸர்வேசுவரன் கதையல்லது மனத்திருளை ஒழிப்பதற்குப் பிறிதுயாதுளது? சிறப்புற்ற நல்ல தடாகத்தில் விரும்பி வஸிக்கின்ற அன்னமானது, காட்டில் சிறிய காக்கைகள் சேர்ந்திருக்கின்ற குளத்தைக் கருதாததுபோல ஸர்வேசுவரனுடைய ஸரிதத்தைக் கேட்டவர்கள் ஞானமிக்கவராய்ப் பிறிதொன்றையும் விரும்பமாட்டார்கள். பிறந்திறந்துழன்று வருகிற பிறவிப்பிணியை ஒழிப்பதற்கு ஸர்வேசுவரனுடைய ஸரிதமே மருந்தாயிருக்கும். முன்னொரு காலத்தில் யான் பாகவதர்களின் உச்சிஷ்டத்தை அவர்கள் உகந்தளிக்கப் பெற்றுண்டு அவர்களால் சொல்லப்பட்ட எம்பெருமானுடைய ஸரிதத்தைக் கேட்டதாலன்றோ கொடிய பாபத்தினின்றும் விடுபட்டவனானேன். இந்த வரலாற்றை யான் முறையாகச் சொல்லுகிறேன் கேட்பீராக.

ஒரு ப்ராஹ்மணனுக்கு அடிமைத் தொழில் செய்து கொண்டிருந்த ஒருத்தியின் வயிற்றில் பிறந்திருந்தேன், அந்த ப்ராஹ்மணனுடைய க்ருஹத்திற்குப் பற்றற்ற பரமபாகவதர்களாகிய ஸந்யாஸிகள் வந்தார்கள். அப்பொழுது கார்காலமும் வந்து சேர்ந்தது. ஸந்யாஸிகள் கார்காலங்கழியும் நான்கு மாதம் வரையும் ஓரிடத்திலிருந்து சாதுர்மாதஸங்கல்பம் என்ற ஓர் விரதத்தை அநுஷ்டிப்பதற்குக் கடமைப்பட்டவராதலால் அவ்விடத்திலே அவர்கள் தங்கும்படி நேர்ந்தது.

"அடைந்திடுமெதிகடமக்கெனையேவலந்தணன்செய்திடப்பணித்தான்
கடந்தவர்மிகவுண்மகிழ்ந்திடும்படிசெய்கருத்தினனேவல்செய்தவர்சேர்
இடந்தனின்மருவிநுகர்ந்திடுசேடமிருந்தவர்சொல்லினுண்டதனல்
தொடர்ந்திடுபாவம்வேரொடுதொலைபத்துலங்கியதுள்ளமுமரதோ"

என்றபடி அப்பொழுது அந்த ப்ராமணன் என்னை ஸந்யாஸிகளுக்கு அடிமை செய்யும்படி கட்டளையிட்டான், யானும் அவர்கள் மனமுகக்கும்படி பணிவிடைசெய்தேன். பின் அவர்கள் அமுதுசெய்த

உச்சிஷ்டத்தை அவர்கள் நியமனத்தாலுண்டேனாதலால் என் பாபமெல்லாம் அடியோடொழிய மனமும் பரிசுத்தமடைந்தது. பின்பு அந்த ஸந்யாஸிகள் ஸர்வேசுவரனுடைய ஸரிதத்தைக் கனிந்த ஹ்ருதயத்தோடு கூறியதைக்கேட்டேன். அதனால் ஸர்வேசுவரன் விஷயத்தில் பக்தியுடையவனாய் விளங்கினேன். அது சமயம் என்னை ஈன்றெடுத்த மாதாவைச்சர்ப்பந்தீண்டியது. உடனே அவள் உயிர்நீத்தாள். அதன்பிறகு யான் மஹாமேரு பர்வதத்தையடைந்து,

“தற்பரமாகியமலமாய்நின்றதலைவனைக்காண்குதுமென்று
வெற்பினிற்றவஞ்செய்காலையிப்பிறப்பின்விழியெதிர்காண்கிலையெனவோர்
சொற்பெருவிசும்பிலெழுந்ததுவினையாற்றோன்றுமவ்வுடலம்வீழ்ந்திடலும்
கற்பமொன்றொழியக்கண்படைபொருதுங்கடிமலரவனிடத்துற்றேன்”

என்றபடி ஸர்வேசுவரனைக் காணவேண்டுமென்று அவ்விடத்தில் தவஞ்செய்தேன். அந்தச்சமயம் ‘நீ இந்தப் பிறப்பில் காணமாட்டாய்’ என்று அசரீரி கூறியது. அதன்பின் வினைவசத்தால் என் சரீரமொழிய பிர்ம்மாவை யடைந்தேன்.

பின், திருப்பாற்கடலில் யோகநித்திரைசெய்யும் ஸர்வேசுவரன் யோக நித்திரையினின் றெழுந்து பிர்ம்மா, மரீசி முதலானவர்களைச் சிருஷ்டித்தான். அப்பொழுது யான் பிர்ம்மாவிடத்திலிருந்துண்டானேன். யான் இவ்வளவு பெருமையடைவதற்குப் பாகவத உச்சிஷ்டத்தையுண்டு ஹரியின் கதையை அன்போடு கேட்டதே முக்ய காரணமாம். இன்னும்,

“விளக்கழற்கொழியாவெண்மதிக்ககலாவிரிதிரைக்கருங்கடன்முகட்டின்
முளைத்துயர்பசும்பொன்வரைவலந்திரியுமோட்டுவெங்கதிரவற்கேகா
உளத்திருள்கடியுமாயவன்றொன்னூலுரைமதியென்றுபைந்தேறல்
துளக்கறவொழுகியன்னபைந்தொடையாழ்த்தொன்முனிசொற்றனன்
[கன்றான்”

என்றபடி விளக்கொளிக்கும், சந்திர ஸூர்யர்களின் ப்ரகாஸத்திற்கும் போகாதமனவிருளானது ஹரியின் ஸரித்திரத்தைக் கூறியதினால் ஒழியும் ஆதலால் நீர் ஹரியின் ஸரித்திரத்தைச் சொல்வீராகவென்றும் கூறினார். அதன்பின் வேதவ்யாஸபகவான் ஸர்வேசு

வரனைத் துதித்து வேதத்தோடொத்த பெருமையுடைய ஸ்ரீபாகவதத்தைச் சொல்லத் தொடங்கினர். இது நிற்க,

ஸ்ரீகாஞ்சிநகரை ராஜ்யபரிபாலனஞ் செய்துகொண்டிருந்த ராஜாவின் குமாரத்தியை ஒரு பைசாசம் பிடித்தது. அதைப் போக்குதற்கு அரசன் பலமந்த்ரவாதிகளைக்கொண்டு முயன்றவிடத்திலும் அது போகாதொழிய வேறு மந்த்ரவாதத்திற் சிறந்தார் எவரேனுமுண்டோ? என்று விசாரித்தான். அப்பொழுது சிலர் அரசனைநோக்கி இவ்வூரில் யாதவப்ரகாசனென்ற ஒரு அத்வைத ஸந்யாஸி இருக்கின்றார்; அவர் மந்த்ரவாதத்தில் மிகவும் சிறந்தவர்; வேதாந்தங்களை முற்றப்பயின்றவர்; அவர் இங்கு வருவாராகில் இந்த பைசாசம் ஒன்றும் மறுத்துப் பேசாமல் ஓடிவிடும்; என்றார்கள். இது கேட்ட அரசன் ஒற்றரை நோக்கி நீங்கள் 'யாதவப்ரகாசன் என்ற ஸந்யாஸியை அழைத்து வரக்கடவீர்கள்' என்று கட்டளையிட்டான். அவர்கள் யாதவப்ரகாசன் இருப்பிடம்வந்து அரசன் ஆஜ்ஞையைத் தெரிவித்தார்கள். அப்பொழுது யாதவப்ரகாசன் ஒற்றரை நோக்கி 'யாதவப்ரகாசன் உன்னை இவ்விடம்விட்டு ஓடிப்போகும்படி கட்டளையிட்டார்' என்று அந்தப் பைசாசத்திற்கு அறிவிக்கக்கடவீரென்று கூறினர். ஒற்றரும் அவ்வாறே சென்று பைசாசத்திற்கு அறிவித்தார்கள் பைசாசம் அவர்களை நோக்கி 'அந்த யாதவப்ரகாசன் என்ற ஸந்யாஸியை அவ்விடம் விட்டுப் போகச் சொன்னேம்'என்று சொல்லக்கடவீர்களென்றது. ஒற்றரும் அப்படியேசென்று யாதவப்ரகாசனுக்கறிவித்தார்கள். அது கேட்ட யாதவப்ரகாசன் மனக்கொதிப்புற்றுத் தம் சிஷ்யர்களையும் அழைத்துக்கொண்டு அரசன் அரண்மனையடைந்தான். அரசன் யாதவப்ரகாசனைத் தக்கபடி உபசரித்தான். பின் யாதவப்ரகாசன் மஹாமந்த்ரத்தை ஜபித்துக்கொண்டு பைசாசத்தை நோக்கி 'நீ இவ்விடம் விட்டு விரைவில் அகன்றொழிவாய்' என்றான். அப்பொழுது பைசாசம் யாதவப்ரகாசன் நேரே காலை நீட்டிக்கொண்டு அடா! யாதவப்ரகாசா! நீ ஜபிக்கிற மந்த்ரம் யானறிவேனென்று அந்த மந்த்ரத்தைச் சொல்லிக்கொண்டு 'நான் இந்த மந்த்ரத்திற்கும், உனக்கும் பயந்துபோகமாட்டேன்; நீ உனது பூர்வ ஜன்மத்தையுமறியமாட்டாய் எனது பூர்வ ஜன்மமுந் தெரியமாட்டாய் அப்படியிருக்கிற உன்னுடைய ஆஜ்ஞைக்கு யான் கட்டுப்படுவேனோ என்றது. யாதவ

ப்ரகாசன் அதை நோக்கி அப்படியானால் நீயே எனது பூர்வ ஜன்மத்தையும், உனது பூர்வ ஜன்மத்தையும் தெரிவிப்பாய் என்றான். பைசாசம் யாதவப்ரகாசனை நோக்கி 'நீ மதுராந்தகம் என்ற ஊரில் ஒரு ஏரிக்கரையில் ஒரு புற்றில் உடும்பாயிருந்தாய்' அக்காலத்தில் ஸ்ரீரங்கத்திலிருந்து சில ஸ்ரீவைஷ்ணவர்கள் அந்த ஏரியில் நீராடி அவ்விடத்தில் சிறிதுநேரம் தங்கி அமுதுசெய்து சென்றார்கள். அவர்கள் அமுது செய்த ப்ரஸாதத்தின் உச்சிஷ்டத்தை உண்டாய் அதனால் நீ இப்பொழுது யாவராலும் போற்றத்தக்க அந்தணனாய் விளங்குகின்றாய் இது நிற்க, யான் முன்னொரு ப்ராஹ்மணனாய்ப் பிறந்திருந்தேன். மறுமைப்பலனைக்கருதி யாகஞ்செய்யத் தொடங்கினேன். அதில் மந்த்ரலோபம் க்ரியாலோபத்தால் இந்த ஜன்மமடைந்தேன் என்றது. அதின் பின் யாதவப்ரகாசன் அந்தப் பைசாசத்தைப்பார்த்து நீ யாருடைய வார்த்தைக்குக் கட்டுப்படுவாய் என்று கேட்டான். பைசாசம் உம்மிடத்தில் பயின்று கொண்டிருப்பவரில் ஒருவரான இதோ இருக்கின்ற இளையாழ்வார் போகச் சொன்னால் போவேனென்று அவரைத் தண்டன் ஸமர்ப்பித்து நின்றது. அது சமயம் யாதவப்ரகாசன் இளையாழ்வாரைப்பார்த்து நீர் இதைப் போகும்படி கட்டளையிடுமென்று சொல்ல அவரும் அவ்வாறே சொன்னார். பைசாசம் இளையாழ்வாரை நோக்கி ஸ்வாமி! உமது திருவடிகளை என் சிரஸின்மீது வைத்தாலொழிய யான் இதைவிட்டு அகலமாட்டேனென்றது. இளையாழ்வார் அதன் வேண்டுகோளின்படிசெய்ய, பைசாசம் மிகவும் மகிழ்ச்சியோடு அரசன் குமாரத்தியை விட்டுச்சென்றது.

இந்த இரண்டு வரலாற்றாலும் பாகவத உச்சிஷ்டமானது மிகவும் பரிஸுத்தமுடைய தென்பதும், அது, சகல பாபங்களையும் போக்கவல்லதென்பதும் விளங்குகின்றன.

ஸ்ரீ:

நன்கொடை.

நமது திவாகரம் நீடூழிவாழ்ந்து நிலவுதற்காகப் பல தார்மிகர்கள் நன்கொடை புரிந்த விஷயத்தைக் குறித்துச்சென்ற பகுதியில் வெளியிட்டுள்ளோம். அது போலவே இப்பொழுதும், மதுரைத் தமிழ்ச்சங்கத்திற்குக் கௌரவ கார்யதரிசியாயிருந்து அச்சங்கத்தை உயிரெனப் போற்றிவருபவரும், தமிழ்ப்புலவரிடத்தில் விசேஷ அபிமானமுடையவரும், அறிஞருக்கு அரியபலகொடைபுரிந்து வருபவரும், உத்தமகுணங்கட்கெல்லாம் உறைவிடமாயிருப்பவரும், ப்ரபல வக்கீல்களுள் ஒருவருமாகிய மதுரை, ஸ்ரீ. உ. வே. T. C. ஸ்ரீநிவாஸையங்கார் ஸ்வாமி அவர்கள் ரூபா 25 பொருளுதவி புரிந்தார். இத்துணைப் பெருந்தகையாளராகிய இந்த ஸ்வாமி மனமுவந்துதவிய இதுவே நமது திவாகரம் மேன்மேலும் விர்த்திபெற்று விளங்குமென்பதற்கு அறிகுறியாயிருக்கிறது. இது நிற்க, ஸ்ரீரங்கம் ஸ்ரீமாந் நாகமணி ராமாநுஜ தாஸர் அவர்கள் பயன்கருதாது திவாகரத்திற்குப் பலவுபகாரஞ் செய்துள்ளார். இப்பொழுது அவர் புருஷகாரத்தால் திருச்சிராப்பள்ளி ஷராப் வியாபாரம் ஸ்ரீமாந் மு. ரெ. ஸ்ரீராமலு செட்டியார் அவர்கள் ரூபா 25ம், ஷையூர் ஷராப் வியாபாரம் ஸ்ரீமாந் கோபாலகிருஷ்ணப் பிள்ளை, அவர்கள் & ஸ்ரீமாந் அருணாசலஞ் செட்டியார் அவர்கள் ரூபா 25ம், ஷையூர் ஷராப் வியாபாரம் ஸ்ரீமாந் அப்பண்ணா செட்டியார் அவர்கள் ரூபா 25ம் ஷையூர் ஷராப் வியாபாரம் ஸ்ரீமாந் மோதி. ப. ராதாகிருஷ்ணஞ் செட்டியார் அவர்கள் ரூபா 25ம் கொடுத்து ஜீவித சந்தாதார்களாகச் சேர்ந்தார்கள் நிலை பேறுடைய இத்தர்மம் செய்த ஐயங்கார் ஸ்வாமியவர்களும், ஏனைய ஐவரும், இந்த ஐவரைக்கொடுக்கும்படி செய்த ஸ்ரீமாந் நாகமணிராமாநுஜ தாஸரவர்களும், 'பொருந்திய தேசும் பொறையும் திறலும் புகழும் நல்ல, திருந்திய ஞானமும் செல்வமும் பெற்றுவிளங்க ஸர்வேசுவரனைப் பிரார்த்திக்கின்றோம்' ஸ்ரீமாந் நாகமணி ராமாநுஜதாஸர் அவர்கள் தமக்குரிய பலகார்யங்கள் இருக்க திவாகரத்திற்குழைக்க வேண்டியதும் நமது கடமையாம், என்று கருதியகருத்து என்றும் நிலை பெற்றுவாழ்க.

ஸ்ரீ:

பாலபாரதியார் இயற்றிய

இராமாயணத்திருப்புகழ்.

[குறிப்புரை.]

ஹரிஸமயதிவாகரப் பிரசுரம்-உ.

ஹரிஸமயதிவாகர அச்சியந்திரசாலை,

மதுரை.

1925.

இதன் விலை அணா அ.

317

ஸ்ரீ:

இராமாயணத் திருப்புகழ்

முன்னுரை.

ஸ்ரீராமசந்த்ரனுடைய திவ்யசரிதமாகிய அமிர்தத்தைப் பலரும் பருகிக் களிகூருமாறு அருந்தமிழா லளித்த பெருந்தகையாளர் கம்பரென்னுங் கவிச்சக்ரவர்த்தியாவர். அவர்தம் இராமாயணமென்னும் நூலின் அருமை பெருமையை அறியாதார் எவருமே இல்லை. தனக்கு ஒப்புயர்வற்ற தன்மையால், தமிழ்க் கவிகட்கெல்லாம் அஃதொரு சிந்தாமணியே என்னத் திகழ்கின்றது. அதுபற்றிப் பிற்காலத்தறிஞரிற் பெரும்பாலார் தமது செய்யுட்களிலும், உரைநடையிலும், சொற்பொழிவுகளிலும் அதன் பொருள்நயங்களைப் போற்றி எடுத்தாளுவாராயினர். அங்ஙனம் அக் கல்வியிற்பெரியாரது கவிகளில் மிகுதியும் பயிற்சியுடைய புலவர் பெருமான் ஒருவரால் இயற்றப்பெற்றதே இவ் இராமாயணத் திருப்புகழும் என்பது ஈண்டுக் குறிப்பிடற்பாலது.

இராமாயணமென்னும் புண்ணியகதையே புகழ்பொருளாகப் பண்ணியல்வழாத வண்ணவிருத்தங்களிற் பாடுதலின், இப் பிரபந்தம் இராமாயணத் திருப்புகழ் என்று பெயர்பெறுவதாயிற்று. ஆயினும், இதன் ஆசிரியர் இதற்கு இராமசேயம் என்ற மற்றொரு பெயரை வழங்கியிருப்பதாகவும் அறியப்படுகிறது. "யாது நினைந்தாலு மந்த வாழ்வுதரும் த்யாகசிந்து ராமசேயம் பாடவந்து துணையாவாய்" என்பதனை நோக்குக. அக்காரணத்தால் இதற்கு இராமசெயத் திருப்புகழ் என்றும் பெயர் கூறுவதுண்டு.

இதனை இயற்றியருளிய பெரியாரது திருப்பெயர் பாலபாரதி என வழங்கலாகும். எனினும், "துற்றபொருள் கொண்டு பாரதி அப்பன் உனை நெஞ்சிலேகொடு சுத்தகவி கம்பநாடன் இனிதோதும்,

சொற்படி விளம்பும் ராமசெயம்" என அவர் தாமே கூறுதலினின்று, அப்பன் என்பது அவர் இயற்பெயரும் பாரதி என்பது சிறப்புப் பெயருமாக இருக்கலாம் என்று எண்ண இடமுண்டாகின்றது.

இவரது காலமும் இடனும் முதலாய வரலாறொன்றும் தெளிவாக இந்நூலகத்துக் காணக்கிடையாவேனும், தலைமைசான்ற புலமையாளரில் இவரும் ஒருவரேயென்னத் தட்டில்லையென்பது இனிது விளங்கும். இவர் இயற்றமிழுடனே இசைத்தமிழும் பயின்றவர்; தென்மொழியோடு வடமொழியினும் வல்லுநர். இவரது கவித்திறமை மிகவும் மேலானதாக மதித்தற்குரியது.

இப் பனுவல் முழுவதும் சந்தவின்பம் செறிந்த செந்தமிழ்ப் பாடல்களால் நிறைந்து மிளிர்கின்றது. அவற்றுள் வடமொழிப் பதங்கள் பெரும்பான்மையாக வழக்குப் பெறுகின்றன. ஆயினும், அவை செவிக்கினிய ஓசையுடன் செய்யுள்நடையை அழகு செய்வனவாம். ஒவ்வொரு செய்யுளினும் பெருமாளை முன்னிலையாக்கி, முற்பகுதியிற் கவியின் பிரார்த்தனையோடுகூடிய புகழ்ச்சியும், பிற்பகுதியில் இராமாயணக் கதையின் தொடர்பான நிகழ்ச்சியும் அருமையாக அமைத்துப் பாடப்பெற்றுள்ளன. கம்பநாடரது கருத்தமைதியிற் பொருத்தமானவற்றை இடையிடையே எடுத்தாளும் திறமும் மிக வியக்கற்பாலது. உவமை, உருவகம், ஆதிய அணிவகைகள் எல்லாம் இந்நூலுள் மலிந்து காணப்படுகின்றன. சிற்சில விடங்களிற் சொற்றொடர்களின் பொருளாழம் பெரிதும் போற்றத்தக்கது. இவ்வாற்றாற் பலவகையானும் வரையறைப்பட்ட பொருளை மேற்கொண்டு இசைப்பாக்கள் இயற்றுவதெனின், அது யார்க்கும் எளிதினில் வாய்ப்பதின்று. ஆகலின் இவ் வாசிரியரும் ஒரு தெய்வக் கவியே என்பது தெள்ளிதிற் றுணியப்படும்.

இஃதன்றி, இவர் திருமாலடிமையே தமக்குப் பெருவாழ்வாக மதித்த ஸ்ரீவைஷ்ணவ திலகரென்று தெரிகின்றது. திருவரங்கச் செல்வரான அழகியமணவாளப் பெருமாளை இவர் இப் பிரபந்தத்திற்கு நாயகராகக் கொண்டுள்ளார்.* இவரது பாசுரங்கள் யாவும்

*இவ்வுண்மை யுத்தகாண்டத்திறுதிச்செய்யுள்களால் விளங்கும்.

319

பத்திச்சுவை பழுத்தனவாகி, அப்பெருமானிடம் இவர்க்குள்ள அளவு கடந்த அன்பைப் புலப்படுத்துகின்றன. ப்ரபந்நஜனகூடஸ்தரான நம்மாழ்வார்விஷயமாக இவர் நூன்முகப்பில் மங்களாசரணம் செய்திருக்கிறார். மற்றுள்ள ஆழ்வார்களையும் அவரருளிச்செயல்களையும் அடிக்கடி புகழ்ந்து போற்றுகின்றார். திருவஷ்டாக்ஷர மந்த்ரத்தின் பெருமையைப் பலவாறாக வற்புறுத்தியிருக்கிறார். திவ்யதேசங்கள் நூற்றெட்டின் திருப்பெயர்களையும் இடையிடையே எடுத்தோதி இனியராகிறார். திருமண்காப்பும் திருமணித் தாவடமும் அணிந்து, பஞ்சஸம்ஸ்காரம்பெற்று அடியார்குழாத்துடன் கூடிப், பண்ணலங் கனிந்த பாடல்களாற் பெருமாளை மனமுருகப்பாடி மகிழ்வதைத் தமக்குப் பெரும்பேறாக மதித்துப் பேசுகின்றார். பாகவதஸேவையே தமக்குகந்த பணி என்று பாராட்டிக் கூறுகிறார். திவ்யப்ரபந்தம், அஷ்டப்ரபந்தம் முதலானவற்றிலுள்ள அருந்தொடர்களும் அபிப்பிராயங்களும் இத் திருப்புகழில் விரவிவருதலும் அறிந்து மகிழற்பாலது. இவற்றால், ஸ்ரீவைஷ்ணவ ஸமயத்தில் இவ்வாசிரியர்க்குள்ள ஊற்றம் இத்தகைத்தென்பது ஒருவகையான் உணரலாகும்.

இனி, திருமால்மருகரான முருகக்கடவுள்மீது அருணகிரிநாதர் அருளிய திருப்புகழ்ப் பிரபந்தம் இதற்குக் காலத்தான் முந்தியதோ அன்றிப் பிந்தியதோ என்பது அறியக்கூடவில்லை. இதன்கண்ணுள்ள இரண்டொரு பாடல்கள் சிற்சில வேற்றுமையுடன் அதனிடத்துங் காணப்படுகின்றன. ஆயினும் அவை இவ் இராமாயணத் திருப்புகழுக்கே சிறப்பாக உரியன என்று தோன்றுவதால், பிற்காலத்து ஏடெழுதுவோர் அவற்றை அருணகிரியார் திருப்புகழில் இடைச்செருகலாக மாற்றி எழுதிவிட்டனர்போலும். அது நிற்க.

இப் பிரபந்தமுழுமையும் அமுதவெள்ளம் பெருக்காறெடுத்தாற்போன்ற உயரிய ஒழுக்கமுடையதாய்ச் செல்லுகின்றது. சிந்தையால் நினைக்குந்தோறும், செவியினாற் கேட்குந்தோறும், வாயினாற் பாடுந்தோறும் தெவிட்டாத தீஞ்சுவையாய் இஃது தெல்லையில்லாத இன்பம் விளைக்கின்றது. சிந்திக்கத் தித்திக்கும் தேனாகிய திருமாலை வழுத்துதலுற்ற இப்பனுவலும் அத்தன்மையதாதல் அருமையுடைத்தன்றே? இச் சிறப்புப்பற்றி, "சிந்தைக்கினிய செவிக்கினிய வாய்க்

கினிய வந்த இருவினைக்கு மாமருந்து" என்னும் ஆன்றோர் கூற்றிற்குத் தக்கதோர் இலக்கியமாக இதனை எடுத்துக் காட்டலும் ஏற்புடைத்தாகும். "இருள்சேர் இருவினையுஞ் சேரா இறைவன் பொருள்சேர் புகழ் புரிந்தார் மாட்டு" என்பவாகலின், இத் திருப்புகழையும் ஓதியுணர்ந்து ஒழுகவல்லார்க்கு இருவினைத் தொடர்பு மற்றுப் பேரின்பமாகிய பெருவாழ்வும் எய்துமென்பதில் ஐயமென்னை? இப் பெற்றியானே வானோர் மருந்தும் இதனை மானுவதின்றெனத் துணிந்து கூறலாம். அது நாவின் பொறி ஒன்றினே நற்சுவையளிக்கும்; இது செவியினும் வாயினும் சிந்தையினும் தித்திக்கும். அது மரணமொன்றனையும் நீக்கும்; இது வினைப்பயனை வேரறுத்து வீட்டின்பமும் ஆக்கும். ஆகலின் இதன் ஒப்பற்ற உயர்வினைப் பிறிதோராற்றாற் பேசலாவதில்லை.

இனி இத்தகையவாய் எழினலங்கவினும் இவ் விழுமிய பனுவலின் முதற்பகுதி இங்ஙனம் குறிப்புரையோடு அச்சிட்டு வெளியிடப் பெறுகின்றது. இதனைப் பயிலுந் திருவுடையார் எவர்க்கும் இஃதொரு நல்விருந்தாகுமென்றே நம்புகின்றனம். ஆகலின் இதன் எஞ்சிய பகுதிகளும் விரைவினில் வெளிவருமாறு இறைவன் திருவருள் புரிக.

T. N. அப்பனையங்கார்,

மதுரை.

321

ஸ்ரீ:

பிழை திருத்தம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
12	3	வயறிருந்து	வயிறிருந்து
18	21	புன்சிறிப்பு	புன்சிரிப்பு
21	4	திருத்துழிாய்	திருத்துழாய்
23	3	சிறித்து	சிரித்து
24	15	ருங்கி1னறுங்கலே	ருங்கினறுங்கலே
,,	21	2நுமராயம்	நுமராயம்
27	25	தகுதியெனு	தருதியெனு
28	22	மகனொடு	மகனொரு
,,	26	லென்னு	லென்று
29	7	திருத்துமண்டர்	திருந்துமண்டர்
30	21	‘சென்றார்	‘சென்றாற்
,,	23	இளவம்	இளவல்
31	23	விம்மிற்	விம்முற்
,,	28	பிறப்பி	பிறப்பு
32	18	நொந்த	தொந்த
,,	28	காடுதிரன்	காடுதிரண்
37	14	செலுத்து	செலுத்த
38	14	சத்தநோக்கி	சந்தநோக்கி
40	29-30	வெள்வரை	வெளறை
45	12	பொடப்பொடென	பொடுப்பொடென